# *ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை-600 006*

### *அரசுப் பல்தொழில்நுட்பக் கல்லூரி (*Polytechnic*) விரிவுரையாளர் பணித்தெரிவு*

### *பத்திரிக்கை செய்தி*

*தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தின் கடிதம் எண்.32483/பி2/2019, நாள்.06.09.2019-ன் படி அரசுப் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் காலியாக உள்ள 1060 விரிவுரையாளர் பணியிடங்களுக்கு போட்டி எழுத்துத் தேர்வு மற்றும் வெயிட்டேஜ் மதிப்பெண்கள் (weightage marks - பணி அனுபவம் மற்றும் கூடுதல் கல்வித் தகுதிக்கான மதிப்பெண்கள்) அடிப்படையில் தெரிவு செய்து வழங்கும் படி கோரப்பட்டதின் அடிப்படையில் மேற்கண்ட பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரிய அறிவிக்கை எண்.14/2019, நாள். 27.11.2019 –ன் வாயிலாக அறிவிப்பு வெளியிடப்பட்டு, அதற்கான விண்ணப்பங்கள் 22.01.2020 முதல் 12.02.2020 வரை இணையவழியாகப் பெறப்பட்டன.*

*மேற்கண்ட அறிவிக்கையின் அடிப்படையில் கணினி வழித் தேர்வுகள் (CBT) 08.12.2021 முதல் 13.12.2021 வரை நடத்தப்பட்டு, எழுத்துத் தேர்வு முடிவுகள் 08.03.2022 அன்று ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.*

*எழுத்துத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து அடுத்தகட்டமாக அறிவிக்கையின்படி weightage மதிப்பெண்கள் அளிக்கும் பொருட்டு விண்ணப்பதாரர்களின் கல்வித்தகுதி, கூடுதல் கல்வித்தகுதி மற்றும் பணி அனுபவம் ஆகியவை சார்ந்த ஆவணங்களை இணையவழியாகப் பதிவேற்றம் செய்வதற்கு அறிவிப்பு வெளியிடப்பட்டு 11.03.2022 முதல் 01.04.2022 வரை ஆவணங்கள் பெறப்பட்டன.*

*மேலும், ஆவணங்களைப் பதிவேற்றம் செய்வது தொடர்பாக ஏற்படும் சந்தேகங்களைப் போக்குவதற்கு மின்னஞ்சல் வாயிலாக கோரிக்கைகளை அனுப்பி வைக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து 17,058 கோரிக்கை மனுக்கள் மின்னஞ்சல் மூலம் ஆசிரியர் தேர்வு வாரியத்தில் பெறப்பட்டன. இக்கோரிக்கைகள் சார்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.*

*இதனடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியத்தில் வரப்பெற்ற 17,058 மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள 8 விதமான கோரிக்கைகளுக்குப் பதில் அனுப்பப்பட வேண்டியிருந்தது. இதில் Login Id/Password தொடர்பான 2148 கோரிக்கைகளுக்கு மின்னஞ்சல் வழியாக மனுதாரர்களுக்குப் பதில் அளிக்கப்பட்டுள்ளது. இதே போல் Character and Conduct Certificate*

பதிவேற்றம் செய்வது தொடர்பான 1398 கோரிக்கைகளுக்கு மின்னஞ்சல் வழியாக மனுதாரர்களுக்குப் பதில் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பணி அனுபவம் (Work Experience) தொடர்பான 3465 கோரிக்கைகள், இணைப் பாட கல்வித்தகுதிக்கான அரசாணை (G.O. for Equivalent subject) தொடர்பான 7609 கோரிக்கைகள் மற்றும் 2438 இதர கோரிக்கைகள் குறித்து முடிவு எடுக்கப்பட வேண்டிய நிலை உள்ளது.

எனவே, 17,058 கோரிக்கை மனுக்களில் ஏற்கனவே பதில் அனுப்பப்பட்ட 3546 கோரிக்கைகள் தவிர மீதமுள்ள 13512 கோரிக்கைகளுக்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்த விவரத்தினை மனுதாரர்களுக்கு 10 நாட்களுக்குள் தெரிவித்த பின்னரே சான்றிதழ் சரிபார்ப்புப் பணி நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர் விண்ணப்பதாரர்களின் கோரிக்கைகள் அவர்களுடைய ஆவணங்களின் அடிப்படையில் முதல் கட்டமாக சரிபார்த்து சான்றிதழ் சரிபார்ப்பிற்கு தகுதிவாய்ந்தோர் பட்டியல் (Merit List) இணையதளத்தில் வெளியிடப்படும். நிராகரிக்கப் பட்டவர்களின் பட்டியலும் நிராகரிக்கப்பட்டதற்கான காரணத்துடன் வெளியிடப்படும். நிராகரிக்கப்பட்டவர்களுக்கு மேல்முறையீடு செய்ய வாய்ப்பு அளிக்கப்படும். அதன் பின்னர் அடுத்த கட்டமாக மூல ஆவணங்களுடன் விண்ணப்பதாரர் முன்னிலையில் நேரடியாக சான்றிதழ்கள் சரிபார்க்கப்படும். அதன் பின்னர் தற்காலித் தெரிவுப் பட்டியல் (Provisional Selection List) இணையதளத்தில் அனைத்து விவரங்களுடன் வெளிப்படைத் தன்மையுடன் வெளியிடப்படும். நேர்முகத் தேர்வு ஏதும் இப்பணிநியமனத்திற்கு இல்லை என்பதும் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

அனைத்து நடைமுறைகளும் முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும், நேர்மையுடனும் நடைபெறும் என்பதை ஆசிரியர் தேர்வு வாரியம் தெரிவித்துக்கொள்கிறது. இப்பணி முடியுறுவதற்கு குறைந்தபட்சம் 2 மாத காலம் ஆகும் எனவும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

நாள் : 09.04.2022

**தலைவர்**